இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 14-02-2024

# போராட்டம் நடத்தும் முதலமைச்சர்கள் - 2

முதலமைச்சராக இருந்த போது மாண்புமிகு மோடி அவர்கள் என்ன சொன்னார்கள்?

“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும்போது கேட்டவர்தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். அதைத்தான் இன்று தமிழ்நாடு - கேரள - கர்நாடக - மேற்கு வங்க - பஞ்சாப் - டெல்லி முதலமைச்சர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு மோடி அவர்கள் அப்போது குஜராத் முதலமைச்சராக இருந்தார். **“உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைக் குஜராத் மாநில பெண் ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருக்கிறார். பெண்களுக்கு எதிரியாகப் பெண் ஆளுநரே இருக்கிறார். ஒரு பெண் மணி குஜராத்தின் ஆளுநராக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது நமது துரதிருஷ்டமே”** - என்று 2013 ஏப்ரல் 8ம் தேதி. டெல்லியில் நடந்த இந்தியத் தொழிலக சம்மேளனத்தின் (FICCI) கூட்டத்தில் பேசினார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி. அதைத்தான் இன்று தமிழ்நாடு - கேரள - கர்நாடக- மேற்கு வங்க - பஞ்சாப் - டெல்லி முதலமைச்சர்கள் சொல்கிறார்கள்.

மாநிலங்களிடம் இருக்கும் நிதி வளத்தை பறித்துச் சென்று விட்டு நிதியும் தருவது இல்லை. கடன் வாங்கவும் விடுவது இல்லை. இவ்வளவுதான் வாங்க வேண்டும் என்று தடை போட்டு பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தானும் தர மாட்டேன், அடுத்தவரையும் தர விட மாட்டேன் என்பதுதான் இந்த வஞ்சக எண்ணம் ஆகும்.

**“மாநிலங்களின் கொள்கை முன்னுரிமைகளின்படி வளங்களைத் திரட்டுவதற்கும், முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் உள்ள திறனை முடக்குவதையே ஒன்றிய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது” என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குற்றம் சாட்டுவது இதனால்தான். “கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது” என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.**

ஒன்றிய அரசின் திட்டமான, சென்னை மெட்ரோ இரயில் 2 ஆம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்ததால், இத்திட்டத்திற்கான மொத்த கடனான 33,594 கோடி ரூபாய் முழுவதும், மாநிலத்தின் நிகரக் கடன் உச்சவரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளது.

★ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது. இழப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது.

**கடந்த ஐந்து நிதி ஆண்டுகளில் (2018-23) வரை எத்தகைய மோசடியை பா.ஜ.க. அரசு செய்து வருகிறது என்பதை இந்த புள்ளிவிபரம் காட்டும்.**

**ஒரு ரூபாயை தமிழ்நாட்டில் இருந்து பெற்றால் அதில் இருந்து 29 பைசாவைத் தான் திரும்பத் தருகிறது பா.ஜ.க. ஆனால் உத்தரப்பிரதேசத்தில் இருந்து ஒரு ரூபாய் பெற்றால் 2 ரூபாய் 73 பைசா தருகிறது பா.ஜ.க. அரசு. உத்தரப்பிரதேசத்துக்கு ஏன் தருகிறீர்கள் என்று நாம் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கும் ஏன் அதைப் போல தர மறுக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம்.**

**பா.ஜ.க. தமிழ்நாட்டில் 26 பைசா அளவுக்குத் தான் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?**

கர்நாடகாவுக்கு 16 பைசாவும், தெலங்கானாவுக்கு 40 பைசாவும், கேரளாவுக்கு 62 பைசாவும், ஆந்திராவுக்கு 50 பைசாவும்தான் தரப்படுகிறது என்றால் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சனை அல்லவா இது? பணமாக வாங்கி பைசாவாக தருவது ஏன் என்று கேட்கக் கூடாதா?

பிரதமரின் வீடு கட்டும் திட்டம் என்று அதற்குப் பெயர். அந்தத் திட்டத்தில் கட்டப்படும் வீட்டுக்கு ஒன்றிய அரசு தருவது 1.50 லட்சம் ரூபாய் மட்டும்தான். இதில் மாநில அரசு தருவது 7.50 லட்சம் ரூபாய். ஆனால் இதற்குப் பெயர் மட்டும் பிரதமரின் வீடு கட்டும் திட்டம் ஆகும்.

**இரண்டு மாபெரும் பேரிடர்களை சந்தித்தது தமிழ்நாடு. ரூ.37 ஆயிரம் கோடி நிதி கேட்டோம். இதுவரை வழங்கப்படவில்லை. ‘காலில் முள் குத்தினால் கை உடனே எடுக்கும்’ என்று சொன்ன பிரதமர், ஏன் எடுக்க வரவில்லை? காலே உடைந்து கிடக்கிறதே தமிழ்நாட்டில். ‘நாடு என்பது மனித உடல்தான்’ என்றால் பிரதமருக்கு தமிழ்நாட்டு மக்கள் வெள்ளத்தில் மிதந்தபோது ஏன் துடிக்கவில்லை? உடனே ஏன் வரவில்லை?**

●●




சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நேற்று முன்தினம் (12.02.2024) நடைபெற்ற விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்த 977 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் இயக்குநர் மரு.ஆர்.இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# 22 ஆம் தேதி வரை சட்டமன்றக் கூட்டத் தொடர்!

## 19 ஆம் தேதி நிதி நிலை அறிக்கை தாக்கல்!

*சென்னை, பிப். 14 -*

தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத் தொடர் பிப். 22 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 19 ஆம் தேதி 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

மறுநாள் 20 ஆம் தேதி நடப்பு நிதியாண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை தாக்கலாகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நேற்று முன்தினம் ஆளுநர் உரையுடன் தொடங்கியது. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அவரால் ஒப்புதல் தரப்பட்ட ஆளுநர் உரையின் முதல் பக்கத்தை மட்டும் படித்துவிட்டு தொடர்ந்து படிக்காமல் அமர்ந்து விட்டார்.

அதைத் தொடர்ந்து, ஆளுநரின் அச்சடிக்கப்பட்ட உரையின் தமிழாக்கத்தை பேரவைத் தலைவர் மு.அப்பாவு படித்தார்.

அவர் படித்து முடித்தவுடன் ஆளுநர் அவையை விட்டு எழுந்து சென்றுவிட்டார். தேசிய கீதம் இசைக்கும் முன் ஆளுநர் கடந்த ஆண்டைப் போலவே அவையை விட்டு வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் அவை முன்னவர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், அச்சடிக்கப்பட்ட ஆளுநர் உரையின் ஆங்கிலம் மற்றும் தமிழ் முழுவதுமாக அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டும் என்று குறிப்பிட்டு தீர்மானம் கொண்டு வந்தார்.

**துரைமுருகன் தீர்மானம்!**

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பேசுகையில்,

பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த ஆண்டிற்கான முதல் கூட்டத் தொடரின் தொடக்கமாக சட்டமன்றப் பேரவை மரபுகளின் படி ஆளுநர் அவர்களின் உரை நிகழ்ந்துள்ளது. ஆளுநர் அவர்கள் தனது உரையினை வாசித்த பின்னர், பேரவைத் தலைவராகிய தாங்களும் அரசு தயாரித்த உரையின் தமிழாக்கத்தினை அவையில் வாசித்தீர்கள். இது தொடர்பாக சட்டப் பேரவை விதி 17ஐ தளர்த்தி, பின்வரும் தீர்மானத்தினை இப்பேரவையில் முன்மொழிகின்றேன்.

“2024 ஆம் ஆண்டுக்கான இந்த முதல் கூட்டத் தொடரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரை இந்த மன்றத்திற்கு வழங்கப்பட்டபடியே அவைக்குறிப்பில் பதிவேற்றம் செய்திட வேண்டும்” என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்று குறிப்பிட்டார்.

பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் அத் தீர்மானம் ஏற்கப்பட்டதாக பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து நேற்று முன்தினம் பேரவைக் கூட்டம் முடிவுற்றது.

தொடர்ந்து பேரவைத் தலைவர் அறையில் அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற அலுவலாய்வுக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

அதில் மேற்கொண்ட முடிவின்படி வருகிற 22 ஆம் தேதி வரை பேரவைக் கூட்டம் நடத்துவது என்றும், 19 ஆம் தேதி நிதி வரவு, செலவு அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும், 20 ஆம் தேதி வேளாண்மை நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

13 மற்றும் 14 ஆம் தேதிகளில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும் என்றும், 15 ஆம் தேதி பதிலுரை நடைபெறுகிறது.

16,17 , 18 தேதிகளில் விடுமுறை. 22 ஆம் தேதி நிதி நிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் விவாதத்திற்கு பதிலுரை அளிக்கப்படுகிறது.

## கோயம்புத்தூரில் பொதுமக்களிடம் கோரிக்கை மனு!

*கோவை, பிப். 14 -*

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (12.02.2024) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மோ.ஷர்மிளா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் திருமதி மு.கோகிலா, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை பொதுமக்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் அளித்தனர்.

பொதுமக்களிடமிருந்து இலவச வீடு வேண்டி 86 மனுக்களும், வீட்டுமனைப் பட்டா வேண்டி 151 மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 8 மனுக்களும், 224 இதர மனுக்கள் என மொத்தம் 469 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

